2004 ஜுலை 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

20—

சாலை வசதி

***28502—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் பேரூராட்சியில் மூலச்சலிலிருந்து ஊர்குளம் ஆதிதிராவிடர் காலனி வழியாக சரல்விளை பாலம் வரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் ஊராட்சியில் மூலச்சலில் இருந்து ஊர்குளம் ஹரிஜன காலனி வழியாக சரல்விளை பாலம் வரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் ஊராட்சியில் ஊர்குளம் ஆதிதிராவிட மக்கள் வசித்து வருகின்ற பகுதியாகும். அந்த மக்களின் தேவையை முன்னிட்டு விலவூர் ஊராட்சியில் மூலச்சல் சரல்விளைச் சாலையைச் சரி செய்து பாலம் அமைப்பது என்பது மிகவும் அவசியமாகும். அந்தப் பகுதி மக்கள் மாவட்ட மருத்துவமனைக்கு மிக விரைவாக வந்து செல்லவும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்கள் தக்கலை வேட்டைச்சந்தை வந்து செல்வதற்கும் மிகவும் தேவையானதாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறப்புத் திட்டமாக இதை மறுபரிசீலனை செய்து இந்தச் சாலையை அமைத்து பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட விலவூர் ஊராட்சியில் மூலச்சலில் இருந்து ஊர்குளம் ஹரிஜன காலனி வழியாக சரல்விளை பாலம் வரை சாலை அமைக்க வேண்டுமாயின் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு தடுப்புச் சுவர் மற்றும் ஜல்லி வைத்து தார்ச் சாலை அமைக்க ரூ.30 இலட்சம் தேவைப்படுகிறது. இச்செலவினத்தை ஏற்க ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லை. எனினும் வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப இந்தப் பணி மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன், மனுக்கள் குழுத் தலைவர்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 49 முதல் 58 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.